# தகவல் பாலம்

## துாய ஆரோக்கிய அன்னை பங்கு

# OUR LADY OF GOOD HEALTH PARISH

Volume 1, Issue 1 January 2019

**131 Birchmount Road,**
**Scarborough, ON. M1N 3J7**
(Birchmount & Danforth Ave.)

**Tel: 416-264-OLGH (6544)**
**Fax: 416-264-6545**

**Office@olghtamilparish.com**

**www.olghtamilparish.com**

**Fr. Charles W. Collins**
**Pastor**

## MASS SCHEDULE

**Sunday: 12:30 PM & 4:30 PM**

**Tuesday & Wednesday: 7:30 PM**

**First Friday: 7:45 PM**

## Office Hours

**Monday – Closed**
**Tuesday-Friday: 9:00 am – 6:00 pm**
**Saturday: 9:00 am – 3:00 pm**
**Sunday: 11 am – 4 pm; 5:30 pm – 7 pm**

**Maureen Rajathurai**
**Parish Secretary**

**MERRRY CHRISTMAS**
**AND HAPPY NEW YEAR**

**எமது தமிழ் கத்தோலிக்க ஆலயத்தில் உங்களது குடும்பங்களையும் பதிவு செய்துகொள்ள மறக்காதீர்கள்.**

**Please REGISTER your Family at our Tamil Catholic Parish!!**

## வாரநாள் திருப்பலி

**செவ்வாய்க்கிழமை:**
தூய அந்தோனியார் நவநாள் வழிபாடு-திருப்பலி
**புதன்கிழமை:** சதாசகாயஅன்னை வழிபாடு-திருப்பலி
மாலை 7 மணிக்கு திருச் செபமாலை: 7:30 திருப்பலி

---

## பாவசங்கீர்த்தன அருட்சாதனம்

அனைத்து திருப்பலிகளின் முன்பும் பின்பும் (அல்லது முன்னேற்பாட்டுடன்) By Appointment

---

## முதல் வெள்ளி வழிபாடு

நற்கருணை வழிபாடு: 7:00 PM
திருப்பலி: 7:45 pm

---

## ஞானஸ்நான அருட்சாதனம்

பிரதி ஞாயிற்றுக்கிழமை 3:00 மணி

பெற்றோருக்கான ஞானஸ்நான ஆயத்த வகுப்பில் பங்கெடுப்பது முக்கியமானது. வகுப்புக்கள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு எமது அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

---

## திருமண அருட்சாதனம்

தயவுசெய்து பங்குத்தந்தையை நேரத்தோடு தொடர்பு கொள்ளவும். ஒரு வருடத்திற்கு முன்னர் அறிவிப்பது விரும்பத்தக்கது. அல்லது எவ்வளவு முன்னதாக முடியுமோ, உடனே ஆலய அலுவலகத்தை அழைத்து, தகுந்த ஆயத்தம் செய்து, மணவாழ்வைத் தொடங்குமாறு அன்போடு அழைக்கிறோம்.

---

## பாடகர் குழாம் - Church Choir

எமது ஆலய பாடகர் குழாமில் இணைந்து கொள்ள விரும்பும் பாடகர்கள் மற்றும் இசைக் கலைஞர்களை அன்போடு அழைக்கிறோம். தயவுசெய்து பங்குத்தந்தையுடன் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு, உங்களது விருப்பத்தைத் தெரிவிக்கவும்.




## Office Hours during the Holiday Season:

**Parish Office is closed on the following dates:**

December 25, 26, 27, 28 and 29, 2018
January 01, 2019.

Phone: 416-264-OLGH (6544)
office@olghtamilparish.com

For Emergency Contacts: அவசர தேவைகளுக்கு:
Fr.Charles Collins: 647-671-8272

---

## December 28, 2018 – Holy Innocents

சிறுவர் திருப்பலி: 6:30 pm
திருப்பலியின் ஆரம்பத்தில், அனைத்து சிறுவர்களுக்கும் சிறப்பான ஆசீர்வாத சடங்கு இடம்பெறும்.

---

## Youth Ministry - இளைஞர் அவை

Totus Tuus Summer Camp 2019
1-6 Grades; 7-12 Grades
விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.
Ready for ACTION!! Info will be announced soon.

---

## Catholic Women's League

OLGH CWLல் இணைந்து கொண்ட அனைவருக்கும் நன்றி. இன்னும் சேர்ந்துகொள்ள வாய்ப்புள்ளது. அனைத்து பெண்களையும் அன்போடு அழைக்கிறோம்.

---

## 2019 Offertory Envelopes

பெற்றுவிட்டீர்களா? உங்கள் தாராளமான உதவியில் தான் எமது பங்கு வளர்ச்சிபெற்று வருகிறது.
"சிறு துளி – பெரு வெள்ளம்"
எமது ஆலயமே எம் குடும்பம்.



**அனைவருக்கும் இறை ஆசியுடன் கூடிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.**



கனடாவாழ் தமிழ் பங்குமக்களுடன் எனது முதல் பணி ஆண்டில் பயணிக்கும் இவ்வேளையில், இந்த தகவல் பரிமாற்றப் பாலத்தினூடாக உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்வடைகிறேன்.

ஈராயிரம் வருடங்களுக்கு முன் இயேசு இவ்வுலகில் பிறந்த போது என்ன நடந்தது என்பதை சற்று ஆராய்வோமாகில் நம் கொண்டாட்டங்கள் அர்த்த-முள்ளவைகளாக மாறும். உலக இரட்சகராக இயேசு பிறந்திருக்கிறார் என்கிற செய்தி முதன்முதலில் ஏழை இடையர்களுக்கு அறிவிக்கப்பட்டதும், ஞானிகளின் வருகையும் தொழுகையும், ஆரம்பத்திலிருந்தே இறைவனின் திட்டத்தை வெளிக்காட்டி நிற்கின்றன.

குழந்தையாகப் பிறந்து, தொட்டியில் கிடத்தப்பட்டுள்ள இக்குழந்தையைப்பற்றி சிந்திப்பதற்கு நாம் அழைக்கப்படுகிறோம். நாம் இறைவனைத் தேடிச் செல்வதற்குப் பதில், இறைவன் நம்மைத் தேடி வருவதை நாம் உணர்கிறோமா? நம்மை அவர் தேடிக் கண்டுபிடிக்க அனுமதிக்கிறோமா?

மாடடைத் தொழுவத்தில் பிறந்துள்ளவர், தற்பெருமை கொண்டோரைத் தேடாமல், எளிய மக்களைத் தேடிச் சென்றதைச் சிந்திக்கிறோம். இந்த வேளையில், எமது நாட்டில் பல்வேறு இன்னல்களை, துன்பங்களை, பிரச்சனைகளை, பொருளாதாரச் சுமைகளை அனுபவித்துக்கொண்டு அல்லல்படும் எமது தாயக உடன்பிறப்புக்களை நாம் சிந்திக்கவும், அவர்களுக்காக தியானிக்கவும் செபிக்கவும், அத்துடன் எம்மாலான உதவிகளை வழங்கவும் அழைக்கப்படுகிறோம். அவர்களது வாழ்வில் அமைதியும் சந்தோசமும் மீண்டும் துளிர்விடவும், அவர்களது கனவுகளும் ஏக்கங்களும் பலிக்கவும், எமது நாட்டில் நிரந்தர அமைதி பிறக்கவும், பாலகன் கிறீஸ்துவின் பிறப்பு, அவர்களுக்கு முழுமையான அனுகூலங்களைப் பெற்றுக்கொடுக்கவும் பிரார்த்திப்போம்.


ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மனித உருவிலே இம் மண்ணிலே பிறந்த இறைமகன் இயேசு கிறிஸ்து, மார்கழிப் பனியில் டிசம்பர் 24ம் திகதி நள்ளிரவில் நம் உள்ளங்களிலும் இல்லங்களிலும் பிறக்க வேண்டும் என்ற ஏக்கத்தோடு இயேசுவின் பிறப்பை எதிர்நோக்கி இருக்கும் உங்கள் அனைவருக்கும், ரொறன்ரோ பெருநகர் புனித ஆரோக்கிய அன்னை தமிழ் பங்கின் சார்பில், நிறைவான நத்தார் வாழ்த்துக்களைக்கூறி, பிறக்கவிருக்கும் குழந்தை இயேசுவின் முழுமையான ஆசிகளையும் வழங்கி வாழ்த்துவதில் பேருவகை கொள்கிறேன்.

இயேசுவின் முழுமையான இறைஆசீர், உங்கள் மீதும், உங்களது அன்பான குடும்பத்தினர், பிள்ளைகள், உறவினர் நண்பர்கள் மீதும் நிறைவாகத் தங்கவேண்டுமென ஆசித்து வாழ்த்துகிறேன். புதிதாகப் பிறக்கும் புத்தாண்டான 2019ம் ஆண்டு முழுவதும், உங்களது விருப்பங்கள், கனவுகள், ஏக்கங்கள், திட்டங்கள் அனைத்தையும் நியமாக்கி, இறைஇயேசுவின் ஆசியில் உங்கள் வாழ்வில் அனைத்தும் வெற்றியாக அமைந்திட மனநிறைவுடன் வாழ்த்துகிறேன்.

**சாள்ஸ் கொலின்ஸ், பங்குத் தந்தை**
**தூய ஆரோக்கிய அன்னை தமிழ் பங்கு**



**Rev.Fr.Peter Tammearu**
**Parish Priest**
Immaculate Heart of Mary Church
**We are very grateful for all your guidance!**



**Rev.Fr.Peter Gitendran**
**Million thanks for all your assistance and guidance! May God Bless You!**

## பங்கு மக்களின் புகைப்பட மலர்

எமது தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு 2019ம் ஆண்டு 25 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. பங்கின் வெள்ளி விழாவைச் சிறப்பிக்கும் வகையில் எமது பங்கு மக்கள் அனைவரின் குடும்பப் படங்கள் அடங்கிய புகைப்பட மலர் தயாரிக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இதற்கான படங்கள் எடுக்கும் ஆயத்த விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும். உங்கள் குடும்பப் படங்களையும் இணைத்துக்கொள்ள எமது காரியாலயத்துடன் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

## ஆன்மீகப் பயணம் - Lent Mission - 2019

சிறுவர்கள், இளையவர்கள், குடும்பத்தினர், தந்தையர், தாய்மார், முதியவர்கள் அனைவருக்கும் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்ட ஆன்மீகக் கருத்தரங்குகளும், தியானம், பயிற்சிப் பட்டறை போன்றன நடைபெறும்.

## அர்ப்பணம்

ஜனவரி 6ம் திகதி மாலை 4:30 மணி திருப்பலியின் போது, 2019-2021 வருடங்களில் எமது பங்கில் தன்னார்வத் தொண்டர் பணியாற்றும் அனைவருக்குமான அர்ப்பணம் மற்றும் வாக்குறுதி (Commitment & Promise) எடுத்துக் கொள்ளும் நிகழ்வு இடம்பெறும்.

## நன்றி

அர்ப்பணத்துடனும் நல்மனதுடனும் பணிகளை மேற்கொள்ளும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மகிழ்ச்சியுடன் கூடிய என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், மலரும் ஆண்டிலும் உங்கள் ஒவ்வொருவரின் பூரண ஒத்துழைப்பை அன்போடு எதிர்பார்த்து நிற்கிறோம். உங்களையும் உங்கள் குடும்பத்தையும் பிறக்கும் பாலக இயேசு நிறைவாக ஆசீர்வதிக்க தினமும் நாம் வேண்டுகிறோம்.

## எமது பணிப் பீடங்கள்

- பங்குச் சபை
- பீடப் பணியாளர்கள்
- வாசகர்கள்
- நற்கருணைப் பணியாளர்கள்
- வரவேற்பாளர்கள்
- பாடகர் குழுவினர்
- மரியாயின் சேனை
- நிதிப் பொறுப்பாளர்கள்
- உதவியாளர்கள்

## தேவ அழைத்தல்

எமது குடும்பங்களில் தேவ அழைத்தல் உருவாக வேண்டுவோம். பீடத்தை அலங்கரிக்கும் இயேசுவின் பிரதிநிதிகளாக எமது பிள்ளைகளும் உருவாக உற்சாகம் கொடுப்போம். ‘அழைத்தலின் விளை நிலம் குடும்பம்’. இறையருளால் நனவாகும்.

## பாடல் புத்தகம் - புதிய செபங்கள்

திருப்பலிக்குப் பயன்படுத்தப்படும் சிறிய பாடல் புத்தகம் உங்கள் கைகளில் தவழ்கின்றன. ஒரு முறை பாடுதல் இருமுறை செபிப்பதற்கு சமன் என்கிறார் தூய அகுஸ்தீனார். இணைந்து பாடி, இறைவனைப் புகழ்ந்து, இறையாசீர் நிறைவாகப் பெறுங்கள்.

எமது செபங்களில் பல்வேறு மொழி மாற்றம், சொல் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதை நீங்கள் அறிவீர்கள். ஆலயத்தில் வழங்கப்படும் செபங்கள் அடங்கிய அட்டைகளைப் பயன்படுத்தி, புதிய செபங்களை இணைந்து சொல்வதன் மூலம் எம்மைப் பழக்கப்படுத்திக் கொள்வோம்.

## ஆன்மீக வாழ்வு – ஞான ஒடுக்கம்

எமது பங்கு மக்களின் ஆன்மீக வாழ்வை மேம்படுத்தும் நோக்குடன், ஞானஒடுக்கத்துடன் கூடிய சிறப்பான உளவள பட்டறை ஒன்றை ஒழுங்கு செய்யும் எண்ணம் உள்ளது. இதற்கெனப் பயிற்றுவிக்கப்பட்ட ‘துறைசார் பாண்டித்தியம்’ பெற்ற குருவானவர் மூலம் இதை நடத்துவது குறித்த உங்கள் கருத்துக்களையும் விருப்பங்களையும் அறிய விரும்புகிறோம்.

# This is Your Church!
# Get Involved!!